# வண்ணாரப்பேட்டை-டி.எம்.எஸ். இடையே இன்று முதல் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம்

சென்னை, ஜன.18: வண்ணாரப் பேட்டை - தேனாம்பேட்டை (ஏஜி- டி.எம்.எஸ்.) இடையே மெட்ரோ ரயில் வழித்தடத்தில் வெள்ளிக்கிழமைதொடங்கிவரும் 21-ஆம் தேதி வரை ஆய்வு நடை பெற உள்ளது. இந்த ஆய்வின் போது, 80 கிலோமீட்டர் வேகத் தில் மெட்ரோ ரயிலை இயக்கி சோதனை ஓட்டம் நடத்தப்பட உள்ளது.

வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் வரை முதல் வழித்தடத்திலும்,சென்ட்ரல்முதல் பரங்கி மலை வரை இரண்டாவது வழித்தடத்திலும் மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் நடைபெற்று வந் தன. இதில், இரண்டாவது வழித் தடப் பணிகள் நிறைவடைந்து மெட்ரோ ரயில்கள் இயக்கப்படு கின்றன.

முதல் வழித் தடத்தில், தேனாம் பேட்டை (ஏ.ஜி.-டி.எம்.எஸ்) - வண்ணாரப்பேட்டை இடையே 10 கி.மீ. தொலைவுக்கு கட்டுமா னப் பணிகள் மற்றும் சுரங்கப் பாதைப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன. இவற்றை மெட்ரோ ரயில்வே பொறியா ளர்கள் ஆய்வு செய்து வந்தனர். மேலும், இங்கு மெட்ரோ ரயில்வே பாதுகாப்பு ஆணையரின் ஆய்வுக் காக தேவையான அனைத்து ஆவ ணங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருந் தன.

இந்நிலையில், வண்ணா ரப் பேட்டை - ஏ.ஜி. - டி.எம். எஸ். இடையே ஆய்வு மற்றும் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் பாதுகாப்பு ஆணையர் கே.ஏ.ம னோகரன் தலைமையில் சனிக்கி ழமை (ஜன.19) முதல் திங்கள்கி ழமை (ஜன. 21) வரை மூன்று நாள் கள் நடைபெற உள்ளன. இதற் காக பாதுகாப்பு ஆணையர் தலை மையிலான குழுவினர் பெங்களூ ரில் இருந்து சனிக்கிழமை காலை சென்னைக்கு வரவுள்ளனர். வண் ணாரப் பேட்டையில் இருந்து சென்ட்ரல் வரை ரயில் பாதை மற் றும் நிலையங்களில் ஆய்வு நடத் தப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை சென்ட்ரலில் இருந்து தேனாம் பேட்டை, டி.எம்.எஸ். வரை ரயில் பாதை மற்றும் நிலையங்கள் ஆய்வு செய்யப்பட உள்ளன. மாலையில், வண்ணாரப்பேட்டை - தேனாம் பேட்டை(ஏஜி - டி.எம்.எஸ்.) வரை 80 கிலோ மீட்டர் வேகத்தில் மெட்ரோ ரயிலை இயக்கி பாது காப்பு ஆணையர் கே.ஏ.மனோ கரன் தலைமையிலான குழுவி னர் சோதனை நடத்துகின்றனர். இதைத் தொடர்ந்து, நடைமேடை யின் உள்புறம், வெளிப்புறத்தில் ஆய்வுகள் நடத்தப்பட உள்ளன.

உள்புறத்தில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், வெளிப் புறத்தில் செய்யப்பட்டுள்ள வசதி கள் ஆகியன குறித்தும் ஆய்வு செய் யப்படுகிறது. இதேபோல, திங்கள் கிழமை அன்று மூன்றாவது நாள் ஆய்வு நடைபெறும். இதில், ஏதா வது குறை க ள் இருந்தால், அது தொடர்பாக மெட்ரோ ரயில்வே நிர்வாகத்தி டம் பாதுகாப்பு ஆணையர் தெரி விப்பார். ஆணையரின் அறிவுறுத் தல்படி, தேவையான திருத்தங்கள் செய்யப்படவுள்ளன.



இது குறித்து மெட்ரோ ரயில்வே நிர்வாக அதிகாரி ஒருவர் கூறியது. மெட்ரோ ரயில்வே பாதுகாப்பு ஆணையர் கே.ஏ.மனோகரன் தலைமையில் நடைபெறும் ஆய்வு மற்றும் சோதனை ஓட்டம் முடிந் தபிறகு, அவர் தெரிவிக்கும் குறை கள் சரி செய்யப்படும். அதன்பிறகு இந்த மாத இறுதிக்குள் வண்ணா ரப்பேட்டை- தேனாம்பேட்டை( ஏ.ஜி- டி.எம்.எஸ்) இடையே மெட்ரோ ரயில் போக்குவ ரத்து தொடங்கும் என் றார் அவர்.